Prob O.P. No. 306/2020

**17.09.2025**

**ம.த.சா. 1 – திரு. அண்ணாமலை, த/பெ.சொக்கலிங்கம்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 5 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன என்றால் என் தந்தை என் பெயரில் உயில் எழுதி வைத்தார். அந்த உயிலை நிரூபிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் உயில் எழுதிவைத்தார் என்றால் தேதி தெரியாது, 1997 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் எழுதி வைத்தார். உயில் பதிவுசெய்யப்பட்தா என்றால் பதிவுசெய்யப்பட்டது. அவ்வாறு ஒரு உயில் எழுதப்பட்டுள்ளது என எனக்கு எப்போது தெரியும் என்றால் 1 மாதம் கழித்து தெரியும். எப்படி தெரியும் என்றால் என் தந்தை கூறினார். என் தந்தை என்ன கூறினார் என்றால் மொத்த சொத்தையும் எனக்கு உயில் எழுதி வைத்ததாக கூறினார். சொத்து என் தந்தைக்கு எப்படி கிடைத்தது என்றால் 1936 ஆம் ஆண்டு என் பெரியப்பாவிடமிருந்து என் தந்தைக்கு அக்கு விடுதலை பத்திரம் வாங்கியதாகும். மேற்படி சொத்து பூர்வீக சொத்தா என்றால் பூர்வீக சொத்து தான். என் பிரகாரம் சரிபாதி என் தந்தையின் சொத்து மற்றும் மீதி பாகம் என் பெயரிப்பாவிடமிருந்து விடுதலை பத்திரம் மூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை எந்த தேதியில் இறந்தார் என்றால் 29/04/1998ல் இறந்தார். என் தந்தைக்கு இறக்கும்போது எத்தனை வயது என்றால் 80 வயது இருக்கும். என் தந்தை இறக்கும்போது 93 வயதா என்றால் சரியல்ல. உயிலில் 79 வயது என போட்டுள்ளதால் தற்போது என் தந்தையின் வயது இறக்கும்போது 80 இருக்கும் என்றால் உயில் எழுதி 1 வருடம் உயிருடன் இருந்தார். இறப்பு சான்றிதழில் என் தந்தையின் வயது 93 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தை இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பதாக தன்னை ஏமாற்றி சொத்தையெல்லாம் மாற்றிக் கொண்டார்கள் என்று முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு புகார் அனுப்பியுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 1992ல் என் தந்தை தன்னடைய பிள்ளைகள் சேர்ந்து தன் சொத்தை அவர்கள் பெயருக்க மாற்றிக்கொண்டார்கள் என்று முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு புகார் அனுப்பியுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என் தந்தைக்கு

பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் உயிலில் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். உயிலை நான் படித்துபார்த்தேனா என்றால் படித்துபார்த்தேன். உயிலை நான் தான் அமுல்படுத்தவேண்டும் என்று அதில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் பட்டா மாற்றிக்கொண்டு நான் சொத்தை அனுபவிக்கவேண்டும் என உயிலில் எழுதப்பட்டுள்ளது. கன்னியப்பன் என் அண்ணன். என் அண்ணனை குறித்து இந்த உயிலில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அண்ணனுக்கு கொடுக்க வேண்டிய பாகத்தை கொடுத்துவிட்டேன் என்றோ, கொடுக்க விருப்பம் இல்லை என்றோ உயிலில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். முழுசொத்தையும் ஏன் என் பெயருக்கு கொடுக்க வேண்டும் என்று காரணம் எதுவும் உயிலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்து என் தந்தைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று உயிலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் குடியிருக்கும் வீட்டின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் அண்ணன் பெயரில் உள்ளது. ஒரு வீடு என் பெயரில் உள்ளது. என் அண்ணன் பெயரில் பட்டா எந்த வருடம் இருந்தது என்றால் 1993ஆம் வருடம் என் அண்ணன் பெயரில் பட்டா வந்தது. உயில் எழுதுவதற்கு முன்பதாகவே அந்த சொத்து என் அண்ணன் கன்னியப்பன் பெயரில் இருந்தது என்றால் சரிதான். ஆகவே உயிலில் உள்ள அயிட்டம் எண்.6 சொத்துகுறித்து என் தந்தைக்கு என் பெயரில் உயில் எழுதிவைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் உள்ள சொத்துக்கள் கிராம நத்தம் என்றால் சரிதான். மேற்படி மனைக்கு பட்டா என் பெயரில் பட்டா மாற்றி கொடுக்க மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனு என்ன ஆனது என்றால் உயிலை நிரூபிக்கும் பட்சத்தில் மாற்றி தருவதாக பள்ளிப்பட்டு தாசில்தார் கூறினார். அந்த உத்தரவை எதிர்த்து நான் RDO விடம் மேல்முறையீடு செய்தேனா என்றால் மேல்முறையீடு செய்தேன். பட்டா வழங்க சொல்லி RDO உத்தரவு போட்டாரா என்றால் உத்தரவு போட்டார். அந்த உத்தரவை எதிர்த்து முதலாம் எதிர்மனுதாரர் DRO விடம் மேல்முறையீடு செய்தாரா என்றால் இல்லை. உயிலில் உள்ள சொத்தை 393/1B, 1 ஏக்கர் நிலத்தை என் அண்ணன் மனைவி என்னிடமிருந்து கிரையம் பெற்று அவர் அதை அனுபவித்து வருகிறார். என் அண்ணன் தற்போது உயிருடன் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் RDO வின் உத்தரவின் பேரில் DRO விடம் மேல்முறையீடு

செய்து மேற்படி சொத்து நத்தம் சொத்து என்றும் கன்னியப்பன் பெயரில் பட்டா இருப்பதால் RDO போட்ட உத்தரவை DRO ரத்து செய்து உத்தரவிட்டார். என் தந்தை 1998ல் இறந்து 22 வருடங்கள் கழித்து மேற்படி உயிலை நிரூபனம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயிலை நிரூபனம் செய்தால் தான் பட்டா மாற்றம் செய்யமுடியும் என்பதால் மனுவை தாக்கல் செய்துள்ளேன். உயிலில் உள்ள அயிட்டம் எண் 6 தவிர மற்ற சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா மாற்றலாகிவிட்டதா என்றால் மாற்றலாகிவிட்டது. அயிட்டம் எண் 6ல் எதிர்மனுதாரர்கள் குடியிருப்பதால் என் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்களை சொத்திலிருந்து காலிசெய்யவேண்டுமென்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயிலில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இருவரும் உயிருடன் இருக்கிறார்கள். கணேசன் என்பவரால் பேச முடியாது. உயிலை எழுதுவதற்கு சொக்கலிங்கத்திற்கு உரிமையில்லை என்றாலும் அவர் உயில் எழுதிவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அவ்வாறு அவர் உயில் எழுதிவைக்கவில்லை என்றாலும் சரியல்ல. உயிலில் கண்டுள்ள வாசகங்களின் அடிப்படையிலும், சங்கதிகளின் அடிப்படையில் உயில் போலியானது என தெரியவருகிறது என்றால் சரியல்ல. உயில் உண்மையானது அல்ல, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.